# சந்திரிகாவின் பதில் கடிதம் தாமதமாகிறது!

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 21 இதழ் 23
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 5-3-1995

[கொழும்பு]

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு பிரபாகரனின் கடிதத்திற்கான பதில் கடிதத்தை ஜனாதிபதி சந்திரிகா இன்னமும் வெளியிடவில்லை.

கடந்த மாதம் 25 ம் திகதி திரு பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அரசின்போக்குக் குறித்து கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் அவர் தெரிவித்த பல குற்றச்சாட்டுகளையும் மறுத்த ஜனாதிபதி சந்திரிகா அதற்கான பதில் கடிதத்தை அடுத்த இரு தினங்களில் அனுப்பப்போவதாக கடந்த முதலாம் திகதி எதிர்பார்க்கப்பட்டது.

இக்கடிதம் 3 நாட்களுக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## சோர்வடைந்த நிலையில் உண்ணாவிரதிகள்

(யாழ்ப்பாணம்)

புலிகளின் பாதுகாப்பிலுள்ள 16 போர்க்கைதிகளும் உண்ணாவிரதம் ஆரம்பித்து நேற்று நான்கு நாட்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை அரசிடமிருந்து பதில்கள் எதுவும் அனுப்பப்படவில்லை.

உண்ணாவிரதம் தொடர்பாக ஜனாதிபதிக்கும், பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கும் தெளிவான கடிதங்களை அனுப்பியிருந்த போதிலும் அரசு இது தொடர்பாக இதுவரை மௌனம் சாதித்துவருகிறது.

இதேவேளை போர்க்கைதிகளின் உறவினர்கள் தொண்

(4ம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கள் முறிவடையுமானால் யுத்தத்திற்கு தயாராகுமாறு படையினருக்கு அறிவுறுத்தல்

## - அமைச்சர் ரத்வத்தை விடுத்தார் -

[மட்டக்களப்பு]

அரசுக்கும் — விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் தோல்வியடையுமானால் தொடர்ந்து விடுதலைப் புலிகளுடன் போர் நடத்துவதற்கு அரசுப் படைகள் தயாராயிருக்க வேண்டுமென பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை படையினரை கேட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்திற்கு முப்படைத்தளபதிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சகிதம் விஜயம் செய்த அமைச்சர் ரத்வத்த, களுவாஞ்சக்குடியில் கிழக்கு மாகாண பிராந்திய தளபதிகள் படை அதிகாரிகள், சிப்பாய்கள் என ஆயிரக்கணக்கான படையினர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்: அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை குழப்ப

(4ம் பக்கம் பார்க்க)

## ரத்வத்தையின் பேச்சு கவலை தருகிறது

(கொழும்பு)

போருக்கு தயாராகுமாறு அமைச்சர் ரத்வத்தை படையினருக்கு கூறியிருப்பது சமாதானத்தை விரும்புவோருக்கு பெரும் ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பிலுள்ள தமிழ் பிரமுகர் ஒருவர் பி. பி. ஸி.க்கு தெரிவித்தார்.

சமாதான பேச்சுக்கள்

( 4-ம் பக்கம் பார்க்க)

## ராணுவ தளபாடங்கள் அனைத்தும் படையினருக்கு வழங்கப்படும்

(மட்டக்களப்பு)

சமாதானப் பேச்சுக்கள் தோல்வியடையுமானால் அதன் பின் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆயுதப் படையினருக்கு என்னென்ன தேவைப்படுகின்றனவோ அவை அனைத்தையும் வழங்க அரசு தயாராயிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் கேணல் ரத்வத்தை களுவாஞ்சிக்குடியில் படையினர் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி பி.பி.ஸி. தெரிவிக்கையில்: மட்டு-மாவட்டத்தில் தற்போது படையினரின் நிலை என்ன இப்பகுதியில் புலிகளின் நடவடிக்கைகள் எவ்வாறுள்ளன என்று, இவற்றையெல்லாம் நேரில் அறிந்து கொள்வதற்காகவே அமைச்சர் ரத்வத்தை முப்படைத்

(4-ம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பரவலாக்கல் இந்தியாவின் உதவியை இலங்கை நாடும்

(கொழும்பு)

சிறிலங்கா அரசு அதிகார பரவலாக்கல் உள்ளிட்ட அரசியல் யாப்பு சீர்திருத்தங்களுக்கு இந்தியாவின் உதவியை நாடியுள்ளது.

இந்திய - ஸ்ரீலங்கா உயர் அதிகாரிகள் நேற்று அதிகாரப் பரவலாக்கம் குறித்து விரிவான கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்தமண்டபத்தில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்துரையாடல் இந்தியாவிலுள்ள அரசியல் நிர்வாக அலகுகளை அடிப்படையாக கொண்டு இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில்

(2ம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுக்கள் தோல்வியடையவில்லை சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

அரசுக்கும் - புலிகளுக்குமிடையிலான சமாதான பேச்சுவார்த்தை தோல்வியடையவில்லை. தற்காலிகமாக ஒரு மந்தநிலையே ஏற்பட்டுள்ளது. இதை ஒரு இடைக்காலத் தடையாக நினைத்து சமாதான பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதற்கான முயற்சிகள் தொடர்கின்றன.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா மகரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

சமாதானப் பேச்சுவார்த்

(4ம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகள் நேற்று ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் நேற்று இளைஞர் விவகார அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிக்கேற்ப உடனடியாக நடவடிக்கை

(4ம் பக்கம் பார்க்க)

## விமானப்படையினர் திருமலையில் பயிற்சி

[திருமலை]

திருமலையில் விமானப்படையினர் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுப்பசொனிக், பொம்மர் மற்றும் விமானங்களின் மூலம் இந்த பயிற்சி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேரிரைச்சலுடன் இந்த விமானங்கள் பலதடவைகள் சுற்றி வட்டமிடுவதுடன் தாழப்பறந்தும் குண்டுகள் வீசுவது போன்றும்பல பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன. ரி.சி.

## "இல. இனப்பிரச்னைதீர்வுக்கு ஒரேவழி அதிகாரப்பகிர்வு"

– பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

''இனப்பிரச்னையைத்தீர்ப்பதற்கு போதிய அதிகாரப் பகிர்வுதான் ஒரேவழியாகும்,' என்று நீதித்துறை மற்றும் அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இந்திய — இலங்கை கூட்டுக் கருத்தரங்கு ஒன்றை தொடக்கி வைத்துப் பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

(2ம் பக்கம் பார்க்க)

## வல்லைவெளியில் மரநடுகை

(அரியாலை)

வல்லைவெளி வீதி ஓரங்களிலும் வெளியிடங்களிலும் பூவரசு, வேம்பு, சவுக்கு, மலைவேம்பு ஆகிய மரக்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன. -59

## சிறுவன் காயம்

(அரியாலை)

யாழ். இராசாவின்தோட்ட வீடொன்றில் மாமரமொன்றில் ஏறிய சிறுவன் ஒருவன் கீழேவிழுந்ததில் காயமுற்று வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் க. ரமேஷ் (வயது 08) என்ற சிறுவனே காயமுற்றவராவார். -59

## கண்பரிசோதனை சிகிச்சைப்பிரிவு

[கொழும்புத்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கண்பரிசோதனைச் சிகிச்சைப்பிரிவு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கண் சிகிச்சைப் பிரிவு ஒன்றைவிட்ட ஒருவெள்ளிக்கிழமைகளில் செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. - 154

## மாணவர்களுக்கு பாராட்டு

(அரியாலை]

நெடுந்தீவைச் சேர்ந்த மாணவர்கள் சுப்பிரமணியம் மகேஸ்வரன் (பொறியியல் பீடம்), கனகசபை சுதாகரன் (முகாமைத்துவம்) ஆகிய இருவரும் நான்கு பாடங்களிலும் அதிவிசேடசித்தி பெற்றதினால் தனிநாயக அடிகளார் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கத்தினால் சங்கத்தலைவர் வே. சுந்தரலிங்கத்தின் தலைமையில் மாணவர்களைப் பாராட்டி தலா ஆயிரம் ரூபா பரிசில்கள் வழங்கி பெற்றோர்களை கௌரவித்தலும் அண்மையில் நடைபெற்றது. -59

## ஓய்வூதியம்

[ஆனைப்பந்தி]

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியின் ஓய்வூதியம் பெறுவோருக்குரிய பெப்ரவரி மாதக் கொடுப்பனவு தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படுகின்றது. -101

## ஆலயத்தில் திருட்டு

[நெல்லியடி]

நள்ளிரவுவேளை தேவாலயத்தில் உட்புகுந்த இனந்தெரியாத திருடர் கோஷ்டி, அங்கிருந்த மூன்று உண்டியல்களையும் உடைத்து அதிலிருந்த பெருந்தொகையான பணத்தை திருடிச்சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு புலோலி தெற்கு புனித சூசையப்பர் ஆலயத்தில் நிகழ்ந்துள்ளது. -160

## உருளைக்கிழங்கு சேமிக்க கடன்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சியால் விவசாயிகள் மேற்கொள்ளவுள்ள உருளைக்கிழங்கு சேமிப்பு முயற்சிக்குக் கடன் வழங்குவதற்கான நடவடிக்கையை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விவசாயப் பகுதியினர் அறிமுகப்படுத்தியுள்ள சேமிப்பு முறையின் கீழ் கொட்டகைகள் அமைத்து, சேமிப்பிற்கு வசதியாக இக்கொட்டகை அமைப்பு வேலைகளுக்காகவே தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள், கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலதிக விபரங்களுக்கு அப்பகுதி உற்பத்திக் குழு மூலம் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மேலதிக அலவன்ஸ் தொகையை விரைவில் எம். பி.க்கள் பெறுவர்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகப்பெரும் அலவன்ஸ் தொகையை மிகவிரைவில் பெறவுள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்திகள் தெரிவித்துள்ளன.

அச்செய்திகள் மேலும் தெரிவிக்கையில்; இது தொடர்பான பிரேரணை ஒன்றை பொதுநிர்வாக அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததும் கூடியளவு அலவன்ஸ தொகையை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதன் மூலம் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் 1, 600 ரூபாவை மேலதிக அலவன்ஸ்சாகப் பெற முடியும்.

தற்போது அலவன்ஸ்கள் உட்பட 13,100 ரூபாவை மாதவருமானமாக பெற்றுக் கொள்ளும் இவ்உறுப்பினர்கள் தொலைபேசி வசதிகள், உணவுவசதிகள் உட்பட பல சலுகைகளை அனுபவித்துவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. க-சி

## உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கின் விலை வெகுவாக வீழ்ச்சி கண்டுள்ளது உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பமானதைத் தொடர்ந்தே விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

யாழ், நகரில் தற்பொழுது ஒரு கிலோ உருளைக் கிழங்கு 15 ரூபாவாவிலிருந்து 18ரூபா வரை விற்பனை செய்யப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. -162

## வீரவணக்க கூட்டம்

(ஆனைப்பந்தி)

1991ம் ஆண்டு கட்டுவன் பகுதியில் வேவு பார்க்கச் சென்ற போது இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய வீரவேங்கை லவனிதா வின்4ம் ஆண்டு நினைவு 'வீரவணக்கக் கூட்டம், அண்மையில் நாவற்குழி லவனிதா குடியிருப்பில் நடைபெற்றது.

குடியிருப்புப்பொறுப்பாளர் திரு. தேவன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பொது ஈகச்சுடரை தீவகக் கோட்ட இராணுவப் பொறுப்பாளர் திரு. செழியன் ஏற்றிவைத்தார். தமிழீழ மாவீரர் பணியகப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி தமிழ்க்கவி, பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஜீவா ஆகியோர் நினைவுரைகள் நிகழ்த்தினர்கள். 101

## மேட்டுநில பயிர்ச்செய்கையாளருக்கு கடன் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள 1 113 மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு கிராமிய நிதியத்தின் ஊடாகக் கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை, தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

ஒரு குடும்பத்திற்கு தலா 10,000 ரூபா வீதம் இக்கடன் வழங்கு நடவடிக்கைக்காக ஒரு கோடியே பதினொரு லட்சத்து முப்பதினாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இடம் பெயர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு முதலுதவி பயிற்சி

(யாழ்ப்பாணம்]

இடம்பெயர்ந்த இளைஞர் யுவதிகளுக்கான முதல் உதவிப் பயிற்சி ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியஉதவியுடன் யாழ். மாநகரசபை சுகாதாரப் பிரிவினரால் நடாத்தப்படவுள்ளது.

நாளை 06ம் திகதி தொடக்கம் 10ம் திகதி வரையிலான இப்பயிற்சி நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறும்.

பயிற்சிகளின் நோக்கம் சுகாதார ரீதியாக இடம் பெயர்ந்த மக்களின் தேவைகளை கவனிப்பதற்கு அம்மக்களிடையே உள்ள தொண்டர்களை சேவையிலீடுபடுத்துவதாகும் என்றும் மீளக்குடி அமரும்பொழுது இங்குபெற்ற பயிற்சி அவர்கள் பகுதியிலேயே தொடர்ந்து நன்மை பெறக்கூடியவகையில் அமையும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

போரினால்

# இரண்டு லட்சம் சிறுவர் இடம் பெயர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடைபெற்றுவரும்இனப்போரினால் இரண்டு லட்சம சிறுவர்கள் இடம பெயர்ந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை 1990களில் உலகெங்கும் போரினால் 5 லட்சம் சிறுவர்கள் மரணமடைந்துள்ளதாக ஐ, நா. சிறுவர் நிதியம் அறிவித்துள்ளது.

மேலும் 40 லட்சம் பேர் அங்கவீனமாகியுள்ளனர். இவர்களுள் மூளைபாதிக்கப்பட்டோர், கண் குருடானோரும் அடங்குவர். 50 லட்சம் சிறுவர்கள் இடம் பெயர்ந்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -154

# கலை இலக்கிய கருத்தரங்கின் இறுதி நாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகமும் வெள்ளிச்சமும் இணைந்து நடாத்தும் கலை, இலக்கியக் கருத்தரங்கின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று ஞாயிறு காலை 9.00 மணிமுதல் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறும்.

திருமதி நாச்சியார் செல்வநாயகத்தின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில், விடுதலைப்புலிகள் வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் சு ரவி தொடக்கவுரையையும், பேராசிரியர் கா. சிவத்தம்பி முதலுரையையும் ஆற்றவுள்ளனர்.

கருத்தரங்கில் வாழ்வியலுடன் இணைந்த கவிதைகள் என்ற பொருளில் கலாநிதி சபா.ஜெயராசா, கவிஞர் விவேக் ஆகியோரும். வாழ்வியலுடன் இணைந்த இசை என்ற பொருளில் சங்கீத பூசணம சு. கணபதிப்பிள்ளை, பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் ஆகியோரும். பரந்துபட்ட மக்களுக்கான கலை, இலக்கியம் என்ற பொருளில் திரு. நா. யோகேந்திரநாதனும் கருத்துரை வழங்குவர்.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிறைவுரை ஆற்றுவார். அதனைத் தொடர்ந்து திறந்த அரங்காக மூத்த கவிஞர்கள் பங்கு கொள்ளும் 'நெஞ்சில் குடியிருக்கும் (நினைவுகள், என்ற கவியரங்கு இடம் பெறும். (சி)

## விளக்கு வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

விளக்கு சஞ்சிகையின் தைமாத இதழ் வெளிவந்துள்ளது. கல்வித்திட்டத்தில் மாற்றம் வேண்டும். என்பது இந்த இதழில் ஆசிரியத் தலையங்கத்தில வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்காகச் 'சம்பளக் கற்கை'' எனும் கட்டுரை சேர்க்கப்பட்டிருக்கிறது. க. பொ. த. உயர்தரம் 94-ம் ஆண்டிற்கான பரீட்சையில் தூய கணிதத்தில் மாணவர்கள் ஏன் புள்ளிகளை இழக்க நேர்ந்தது என்பதை பொ. மகேஸ்வரனின் ''புள்ளிகள் இழப்பதைத் தவிருங்கள்'' எனும் கட்டுரை தெளிவுபடுத்துகிறது. இலங்கை ஆசிரியசேவைக்கு ஆசிரியர்கள் உள்வாங்கப்படும் முறைமையும் அதற்கான புதிய சம்பளத்திட்டமும் இந்த இதழின் சிறப்பம்சமாக இடம்பெறுகிறது. பேராசிரியர் கா. சிவத்தம்பியின் 'ஆசிரியரும் சமூகமும்'' திரு. சொக்கன் எழுதிய 'பிள்ளையின் ஆளுமை விருத்தி'' எஸ். ஆர். செல்வகுமார் எழுதிய பிள்ளையின் விவேகத்தைத் தூண்டுதல்'' நல்லூரானின் ''பாதிக்குப் பிச்சை'' நாக பரமசாமியின் ''கடிகாரத்தை ஏன் சுமக்கிறோம்'' சித்தார்த்தனின் 'யாழ்ப்பாணத்தில் உடற் பயிற்சி'' பாலே ஃப்ரெயரியின் 'கல்வியும் விழிப்புணர்வும்'' ஆகிய கட்டுரைகளும் இதழை மேலும் அலங்கரிக்கின்றன.

# 300 கட்டாகாலி நாய்கள் பிடிக்கப்பட்டன

(உடுவில்)

வலிகாமம் தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் காணப்பட்ட 300க்கும் அதிகமான கட்டாக்காலி நாய்கள் சென்ற வாரம் பிரதேச சபையினரால் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

கட்டாக்காலி நாய்களின் தொல்லை இப்பகுதிகளில் அதிகரித்துள்ளதாகவும், அகதி முகாம்கள், பொது இடங்களில் இவை அதிகமாகக் காணப்படுவதால் சுகாதாரத் திற்குத் தீங்கிழைப்பதாகவும் பிரதேச சபை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

பட்டினம், பிரதான தெருக்களில் மட்டுமல்ல, கிராமங்கள், சிறு வீதிகளில் திரியும் நாய்களையும் பிடித்து அழிக்க நடவடிக்கைஎடுக்கப்படவுள்ளதாகவும், வளர்ப்பு நாய் வைத்திருப்போர் அவற்றைக் கட்டி வளர்க்குமாறும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. 109-சி

## இல.இனப்பிரனைக்கு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மக்கள் தற்சமயம் எதிர்நோக்கியுள்ள தீவிர பிரச்னைகள் பலவற்றுக்கு கணிசமான அளவு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காணலாம் என்றார்.

இந்தியாவில் உள்ள சமஷ்டி அமைப்பு தொடர்ந்தும் பிரச்னைக்குட்பட்டு வந்துள்ளது என்று இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதல் வரும் முன்னாள் திட்ட அமைச்சருமான ராமகிருஷ்ண ஹெக்டே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்.

இந்தியாவின் ஆளும் கட்சி அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக அரசியல் யாப்புக்கு விசுவாசத்துடன் நடந்து கொள்ளவில்லை என்றார்.

—ம-ரி-சி

## அதிகாரப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கர்நாடக முன்னாள் முதலமைச்சரும், முன்னாள் மத்திய அமைச்சருமான திரு. இராமகிருஷ்ண ஹெக்டே உட்பட பலர் இந்திய குழு சார்பில் கலந்து கொணடனர். -ரி-சி

## நூல்வெளியீட்டு விழா

(பண்டத்தரிப்பு)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் 'மெய்கண்டான் சிறப்புமலர் நூல் வெளியீட்டு விழா வித்தியாலய அதிபர் கா. நடராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சங்கானை கல்விகோட்ட பிரதிகல்விப் பணிப்பாளர் திரு ப. விக்கினேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நூல் வெளியீட்டு உரையை நிகழ்த்தினர். -72

# இந்திய மீனவர்மீது துன்புறுத்தல்:
# இலங்கை கடற்படையில் இந்தியா கவனம் செலுத்தும்

(சென்னை)

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்தும், கைது செய்யப்படுவது பற்றியும் மத்திய அரசு கவனத்தில் எடுக்கும் என பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான அறிவுறுத்தல்களை தாம் உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கு விடுத்திருப்பதாகவும் திரு. நரசிம்மராவ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மறுமலர்ச்சி தி. மு. க. தலைவர் வை. கோபாலசாமிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் பிரதமர் நரசிம்மராவ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் குறிப்பாக தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் துன்புறுத்தப்படுகின்றனர், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. இவற்றைத் தடுப்பதற்கு இந்திய அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தமிழக மீனவர்களின் 25ற்கும் மேற்பட்ட படகுகள் இலங்கை கடற்படையினரால் பறிமுதல செய்யப்பட்டுள்ளன. இவற்றை மீட்டுத்தருவதற்கும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என திரு. கோபாலசாமி பிரதமர் நரசிம்மராவுக்குஎழுதிய கடிதம் ஒன்றுக்கு பதிலளித்த போதே இதுவிடயத்தில் இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என உறுதியளித்துள்ளார். -இ

# சிறையிலிருந்து தப்பிய ஒன்பது பேரில் ஒருவரது சடலம் மீட்பு

(புதுடில்லி)

தமிழ்நாட்டில் கூவத்திலிருந்து எடுக்கப்பட்ட உடல் மத்திய சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடிய விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படும் ஒன்பது பேரின் ஒருவரது சடலமாகும் என்று அடையாளம் காணப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

கைரேகைகளை தெளிவாக்கியதன் மூலமும், மீண்டும் கைது செய்யப்பட்ட பாலன் மற்றும் பாவேந்திரனும் கூறிய தகவல் அடிப்படையாக வைத்தும் இந்தியப் பொலிஸார் இதை உறுதி செய்துள்ளனர்.

இதனிடையே இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவரை பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்துக்குத்தப்பிச் செல்வதற்கு முன் இந்த கைதிகள் இப்பெண்ணின் வீட்டில் தங்கியிருக்க திட்டமிட்டிருந்ததாக பாலனும், பாவேந்திரனும் பொலிஸாரிடம் ஒப்புக்கொண்டதையடுத்து இந்த விசாரணைநடைபெற்று வருகிறது.

சிறையிலிருந்து தப்பி ஓடிய போது பொலிஸார் சுற்றிவளைக்கப்பட்ட சமயம்இரண்டு பேர் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டனர் -இ

# தேசிய கொடி, தேசிய கீதம், தேசிய தினம் புதிய அரசியலமைப்பில் இல்லை

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள தேசியக் கொடி, தேசிய கீதம், தேசிய தினம் என்பவற்றுக்கான ஏற்பாடுகள் புதிய அரசியலமைப்பில் சேர்க்கப்படவில்லை என அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்

அரசியலமைப்பில் இவற்றைச் சேர்ப்பது தேவையற்றதாகும். அநேகமான நாடுகளின் அரசியலமைப்புகளில் இவ்வாறான தேவையற்ற ஏற்பாடுகள் தவிர்க்கப்பட்டுள்ளன. அதனால் நாமும் அவற்றைச் சேர்க்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியலமைப்பில் 6வது உறுப்புரையின்படி சிங்கக் கொடியே இலங்கையின் தேசியக் கொடி எனவும், 7வது உறுப்புரையின்படி 'ஶ்ரீலங்கா மாதா' என்பதே தேசிய கீதம் எனவும், 8வது உறுப்புரையின்படி பெப்ரவரி 4ம் திகதியே தேசிய தினம் என்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஏற்பாடுகள் புதிய அரசியலமைப்பில் இடம்பெறமாட்டாது. தமிழர் அமைப்புகளினது வேண்டுகோளுக்கு இணங்கவோ அன்றி அவை அரசியலமைப்பில் சேர்க்கப்படத் தேவையில்லை என்றே இந்த ஏற்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன எனவும் திரு. பீரிஸ் தெரிவித்துள்ளார். -சி

## மணிவாக்கு

எதிர்காலத்துக்காக நாம் நம்மைத் தயாரித்துக்கொள்ளும் சிறந்த முறை நிகழ்காலத்திலுள்ள கடமைகளை ஒன்றுவிடாமல செய்து முடிப்பதேயாகும்.

—மக்டொனஸ்ட்.

## நமது நோக்கு

### கருத்தும் செயலும்

"அரசமைப்பின் 13வது திருத்தம் முறையாக அமுல் நடத்தப்பட்டு நீதி கிட்டியிருப்பின், இனப் பிரச்னையே தோன்றி இருக்கமாட்டாது!" என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் கருத்துக் கூறினர்.

இன்று — ஆளும் கட்சியில் மாத்திரமல்லாது, எதிர்க் கட்சியாக மாறிவிட்ட ஐ. தே. க. தலைவர்கள் பலரும் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்துப் பேசி வருகின்றனர்

சுசில் முனசிங்கா மேல் மாகாண சபையில் பொறுப்பான பதவி வகித்தவர்.

முன்பு தங்களது ஆட்சியில் அநீதி நடவடிக்கைகளைத் தட்டிக் கேட்டு நல்வழிப்படுத்தாதவர்கள் இன்று அழகாக, எளிதாகக் கருததுக் கூறிவருவதையிட்டுத் தமிழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் அல்லவா?

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா கூட யாழ்ப்பாணத்தில் நூல்நிலையம் எரிக்கப்பட்டதையும், இனக் கலவரம் தூண்டப்பட்டதையும் கண்டித்துத்தான் கருத்துக்கள் கூறினார்.

ஏன் கூறினார்? மறைந்த காமினி திசநாயக்காவை மட்டம் தட்டுவதற்காகத்தான் என்பதைத் தமிழ் மக்கள் விரைவாக உணர்ந்து கொண்டனர்.

சுசில் முனசிங்கா இன்னொன்றையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை:

எந்தச் சந்திரிகா அம்மையார் மேல் மாகாண முதல்வராக இருந்த போது அதிகாரப் பரவலாக்கல் உரிய முறையில் நடைபெறவில்லை எனக் கூறினரோ, அதே அம்மையார் ஆட்சியில் மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் சீராகக் கிடைத்துள்ளனவா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அப்போது கருத்துக் கூறியவர், இப்போது செயற்படவில்லைஎன்கிறார் சுசில் முனசிங்கா.

ஆனல் —இப்போது கூறுபவர் அப்போது என்ன செய்தார்?

## பலதும் பத்தும்

### குரு பக்தி

1926-ல் ... தமிழகத்திற் புகழ் பெற்றிருந்தவர் தாளவாத்திய நிபுணர் தட்சிணாமூர்த்திப் பிள்ளை. தாளவாத்தியத்திற்கு ஏற்ற மரம் தேர்ந்தெடுக்க மரக் காலையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார். கூடவே போகிறார் இன்னோர் கலைஞர் பழனி சுப்பிரமணிய பிள்ளை.

அப்போது ... தட்சிணாமூர்த்திப் பிள்ளை ஒரு இடத்தை அண்மித்தபோது ... சால்வையை எடுத்து இடுப்பிற் கட்டுகிறார்: காலணியைக் கழட்டிக் கையில் மறைவாக வைத்துக் கொண்டு ... அடக்கமாக ... ஒதுங்கி நடக்கிறார்.

கூடப்போனவர் வியப்புற்று ஏன் இப்படி? என்று கேட்க. ஒரு வீட்டைக் காட்டி கஞ்சிராமேதை மான்பூண்டியா பிள்ளை வசித்த வீடு எனக் கூறித் தனது குருபக்தியை வெளிப்படுத்தினர். குரு மறைந்த பல ஆண்டுகளுக்குப் பிறகே .. இந்த அடக்கம். இன்று ... குருபக்தியா? ... அது என்ன?

— மயூரன்

## இராசி பலன்

**05–03–1995**

ஞாயிற்றுக்கிழமை

**(தமிழுக்கு மாசி –21)**

சதுர்த்தி மு இ. 8-27வரை அச்சுவினி பின்னிரவு 5-13 வரை. மரணயோகம் இராகு காலம் மாலை 4-56 முதல் 6-26 வரை சுபவேளை காலை 9-26 முதல் 10-56 வரை.

மேடம்: எடுத்த காரியம் வெற்றி, புதியமுயற்சி, பண வரவு.

இடபம்: கடமை தவறுதல், பெண்களால்குளப்பம், கடன்.

மிதுனம்: போட்டி குறைதல் நல்லமாற்றம், பயணம்.

கடகம்: அதிருப்தியானநிலை அலைச்சல் சகோதர பகை.

சிங்கம்: மனசங்கடம், தந்தையர் கவலை, விரக்தி.

கன்னி: பிறரை வஞ்சித்தல், தொழில் பங்கம், வாக்கு வாதம்.

துலாம்; குழந்தையால் மகிழ்ச்சி, விருந்துபசாரம், பாராட்டு.

விருச்சிகம்: தொழில் லாபம் மாமனார் உதவி, குடும்பசுகம்

தனுசு: துணை போதல், குடும்ப செலவு, அந்தஸ்து குறைவு.

மகரம்: கலைஞானம், பெரியோர் ஆசி, தெய்வ அனுகூலம்.

கும்பம்: துணிச்சல், புத்திரர் பெருமை, நோய் தணியும்

மீனம்: உள்ளக் குமுறல், தொழில் பங்கம், வெறுப்பு.

— ஜோஸ்யர்

## அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைலயன்ஸ் கழகம் சித்தன்கேணியில்இயங்கும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவர்களின் நலன் கருதி கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்கு கைப் பம்ப் ஒன்றை அன்பளிப்பாக நிறுவி கொடுத்துள்ளது. 72

## இலட்சார்சனை

(அரியாலை)

கோண்டாவில் தில்லையம்பதி ஶ்ரீ சிவகாமி அம்பாளுக்கு எதிர்வரும் 7ந் திகதி செவ்வாய் மாலை 5-00 மணிக்கு அபிஷேக ஆராதனையும் அர்சனையும் நடைபெறும்தொடர்ந்து 10 தினங்கள் இலட்சார்ச்சனை நடைபெற்று 16ந் திகதி வியாழக்கிழமை காலை நடைபெறுகின்ற 64 உபசார விசேட பூசை வழிபாட்டுடன் இலட்சார்ச்சனை நிறைவு பெறுகின்றது. 59

## வருடாந்த உற்சவம்

[நெல்லியடி]

புலோலி தெற்கு புனித சூசையப்பர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 10ம்திகதி நண்பகல்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 18ம் திகதி மாலை திருச்சொரூப பவனியும், மறுநாள் 19ம் திகதி காலை நற்கருணை ஆராதனையும் திருப்பலி பூசை வழிபாடும் இடம் பெறும்.

## இன்று

(ஆனைப்பந்தி)

வேலணை, ஊர்காவற்றுறைக் கோட்டங்களைச் சேர்ந்த சைவசமயபாட ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்பு இன்று 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 4-30 மணிவரை பிறவுண் வீதியில்உள்ள புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென அறிவிக்கப்படுகின்றது. -101

0 0 0

(யாழ்ப்பாணம்)

தமிழ்சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த இலவச சோதிட வகுப்புக்கள் இன்று மாலை மூன்று மணிக்கு ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நடைபெறும்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-03-05**

ஞாயிறு இரவு

08.01 இசையரங்கம்-நிகழ்ச்சியில் செல்வி சாந்த நாயகி சுப்பிரமணியம் அவர்களின் வயலின் கச்சேரி.
08.20 தாயகப்பாடல்கள்
08.30 செய்திகள்
08.40 தொடர் நாடகம் - கருணை ரவி எழுதும் 'காணி நிலம் வேண்டும்' அங்கம் 2.

**1995–03-06**

திங்கள் காலை

07 02 மாவீரவணக்கம்
07.15 நீங்கள் கேட்டவை
07.30 செய்திகள்
07.35 பத்திரிகைச் செய்திகள்
07.40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின்தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-03-05**

ஞாயிறு மாலை

05.01 சிந்தனைச் சிதறல்
05.02 எழுச்சி கீதம்
05.10 புதியவை
05.15 மழலைகளுக்காக
05.30 கதம்பம்
06.00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
06 02 உங்கள் தெரிவு
06..30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## தவக்கால நற்சிந்தனை

"துன்ப வேளையில் என்னோடு இரும். ஆண்டவரே" (சங். 90: 15ஆ)

துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை. ஆனல் துன்பத்தைத் தாங்கிக் கொள்ளும் மனமும் திடமும் நமக்கு வேண்டும். துன்பத்தைக கண்டு துவண்டுவிடாது. அதனை எதிர்கொண்டால் இன்பம் நிச்சயம். யேசுவின் வாழ்வு எமக்கு முன்னோடியாகும், துன்பத்தைத் துணிந்து ஏற்றார். முடிவில் மரணத்தை வெற்றி கண்டார்: எமக்கும் வாழ்வில் சோதனை மேல்சோதனை. வேதனை மேல் வேதனை துணிவோடு தாங்குவோம்.

தா. மைதிலி

வனம் ஓங்க வளம் ஓங்கும்
வளம் ஓங்க தனம் ஓங்கும்

# ஜனவரி ஒளிவீச்சு வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வீடியோ சஞ்சிகையான ''ஒளி வீச்சு'' ஜனவரி 1995ற்கான ஒளிநாடா வந்துவிட்டது.

இந்தியாவின் திட்டமிட்ட சதியினுல் வீரச்சாவடைந்த மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் 2-ம் ஆண்டு நினைவு ''சமகாலப்பார்வை'' எனும் அரசியல் நோக்கு கலை நிகழ்ச்சிகள் ''சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா 2ம் ஆண்டு நிறைவு'' எனும் விவரணம் மற்றும் பல வழமையான அம்சங்களை தாங்கி இவ் ஒளிநாடா வெளிவந்துள்ளது.

இவ் ஒளிநாடா இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 6 00 மணிக்கு யாழ். ஸ்ரீதர் திரையரங்கில் இலவசக காட்சியாக காண்பிக்கப்படும்.

-சி

# பூந்தமல்லி சிறைச்சாலையை புலிகள் தாக்கும் அபாயம்

– தமிழக அரசு அச்சம் –

(சென்னை)

பூந்தமல்லி சிறைச்சாலையில் அமைந்துஅள நீதிமன்றத்தை விடுதலைப் புலிகள் தாக்கக் கூடுமென தமிழக அரசுக்கு அச்சம் எழுந்துளளதாம்.

பயங்கரவாதம் மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் சென்னை மத்திய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த புலிகள் இயக்க சந்தேகநபர்கள் 9 பேர் தப்பிச் சென்றதைத் தொடர்ந்தே இந்த அச்சம் எழுந்துள்ளதாம்.

இதையடுத்து தமிழக கரையோரங்களில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன் அயல் மாநிலங்களிலும் பாதுகாப்பு படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ராஜீவ் கொலை வழக்கு நடைபெறும் பூந்தமல்லி சிறைச்சாலையின் பாதுகாப்பு மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாம்,

-சி

# யூரியா பாவனைக்கு தொடர்ந்தும் கட்டுப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டு மாவட்டத்தில் எதிர்வரும் சிறுபோகத்தின்போதும் யூரியா உரப் பாவனை கட்டுப்படுத்தப்படுமென இராணுவம் அறிவித்துள்ளது.

இராணுவ முகாமைச் சுற்றி ஒன்றரை மைல் சுற்றளவு தூரத்தில் உள்ள வயல்களில் மட்டுமே யூரியா உரம் பயன்படுத்தப்பட முடியும் எனவும் இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாக அமுலில் இருந்து வரும் இந்தத் தடையானது மோதல் தவிர்ப்பு உடன்பாடு அமுலுக்கு வந்தபோதிலும் நீக்கப்படமாட்டாதென கூறப்படுகிறது.

—சி

உள்ளூராட்சி சபை

# தேர்தலை பின்போட்டால் நீதிமன்றம் செல்வோம்

ரணில் கூறுகிறார்

(கொழும்பு)

எதிர்வரும் யூன் மாதம் நடைபெறவேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு ஒத்திவைக்குமானுல் அதனை ஆட்சேபித்து நீதி கோரி நீதிமன்றம் செல்லப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

இத்தேர்தல்கள் விகிதாசார முறைப்படி இல்லாமல் பழைய வட்டார முறைப்படி நடாத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் வட்டார எல்லைகளை மீள நிர்ணயம் செய்துகொள்வதற்காக எல்லை நிர்ணய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது,

மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேசசபைகளின் வட்டாரங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கு கணிசமான கால இடைவெளி அவசியமென்பதால் எதிர்வரும் யூன் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை ஒரு வருட காலத்திற்கு ஒத்திவைக்க அரசு நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளதாம்.

—சி

கடந்தவருடம்

# தெற்கில் 1033 பேர் காணுமல் போயுள்ளனர்

(கொழும்பு)

கடந்த வருடம் இலங்கையின் தென்பகுதியில் 1033பேர் காணுமல் போயுள்ளதாக அண்மையில் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

காணுமல் போனவர்களில் ஐந்து பேர் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் பற்றி இதுவரையும் விபரங்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவ்வாண்டில் 306 சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

—ரி-சி

## சோர்வடைந்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டர் ஸ்தாபனங்களின் ஊடாகவும் வேறு அமைப்புக்களின் ஊடாகவும் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசுடன் தொடர்பு கொள்ள முனைவதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று ஐந்தாவது நாளாக உண்ணுவிரதமிருக்கும் 16 போர்க் கைதிகளின் உடல் நிலை குறிப்பிடத்தக்க அளவு பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கைதிகள் சோர்வடைந்த நிலையில் உள்ளனர். இவர்கள் வாந்தி மயககம் போன்றவற்ருல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ரி-சி

சென்னை சிறையிலிருந்து

# கைதிகள் தப்பியமை பற்றி விசாரணைக் குழு தேவை

[சென்னை]

சென்னை மத்திய சிறையிலிருந்து ஒன்பது விடுதலைப் புலிகள் தப்பிச் சென்றது குறித்த முழு உண்மையையும் கண்டறிவதற்கு சட்டப்பேரவைக் குழு ஒன்றை உடனடியாக அமைக்கவேண்டும் என தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் கேட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்க கைதிகள் தப்பிச்சென்றது நாட்டின் பாதுகாபபுககே பேராபத்தைவிளைவிக்கும் என்பதால் இதுபற்றி பேரவைக் குழு விசாரிப்பது மிகவும் அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவே இந்தச் சிறையிலிருந்து விடுதலைப்புலிகள் தப்பிச் சென்றதற்கானமுழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டுமெனவும் அவர் மேலும் கூறினுர்.

ரி சி

## பட்டதாரிகள்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எடுத்து வேலைகள் வழங்கும்படி அரசாங்கத்திடம் கோரிக்கையும் விடுக்கப்பட்டது.

தனியார் நிறுவனங்களில் 6000 பட்டதாரிகளுக்கு 2500 ரூபா சம்பளத்தில் வேலைகள் வழங்கப்படும் என்று அரசாங்கம் முன்னர் அளித்த வாக்குறுதிகளை தமது கோரிக்கைகளில் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

—ம-ரி-சி

# உணவுப்பொருட்கள் எடுத்துவர யாழ். குடாநாட்டுக்கு 5 கப்பல் சேவை

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிற்கு உணவுப் பொருட்களை எடுத்துவர இவ்வாண்டு ஐந்து கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இதேவேளை தற்போது உணவு பொருட்களை எடுத்து வரும் 'கோமாரி' கப்பலுக்கு பதிலாக 'லங்கா முடிதா' என்ற கப்பல் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது

மேற்படி ஐந்து கப்பலுக்கு அரசு பெருமளவு பணத்தை வாடகையாகச் செலுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

-சி

## இராணுவம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தளபதிகளுடன் மட்டக்களப்பிற்கு சென்றிருந்தார்.

கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாக பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுவருகின்றன. புலிகள் அங்கே புதிய புதிய முகாம்களை ஏற்படுத்துவதாகவும் அந்தப் பகுதியில் போராளிகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகவும் புலிகளுக்கும்- அரசபடையினருக்குமிடையில் வாக்கு வாதங்கள் சர்ச்சைகள் நடந்ததாகவும் செய்திகள் உலவின.

கிழக்கில் தமது போராளிகளின் அரசியல் நடவடிக்கைகளுக்கு அனுமதிக்க வேண்டுமென புலிகள் அரசை வற்புறுத்திவந்துள்ளதும் இங்குகுறிப்பிடத்தக்கது.

சி

## பேச்சுக்கள்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் சில தீய சக்திகள் முயல்கின்றன. இவர்கள் விடயத்தில் பொலிசாரும் ஆயுதப் படையினரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகள் நாட்டு மக்களிற்கு மறைக்கப்படமாட்டாது

''வடக்கு கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது அரசாங்கத்தின் நோக்கமாகும். இத்தகைய வழிமுறைகளின் போது முந்திய அரசாங்கத்தின் நடைமுறைகள் பின்பற்றப்படமாட்டாது.

இந்தப் பிரச்னையை நன்கு விளங்கி அதற்கென சிறந்த திட்டம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் வடக்கு கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் பொறுப்பை தற்போதைய அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

முந்திய அரசாங்கத்தினுல் விடப்பட்டதவறுகள் மீண்டும் இழைக்கப்படமாட்டாது. அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பகைமைத் தவிர்ப்பு உடன்பாடு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தபட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனுதிபதியின் செயலாளர் திரு. பாலபத்த பெண்டியும் அங்கு உரையாற்றினுர்.

ம-ரி-சி

## சமாதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தையில் எமக்கு வெற்றி கிடைத்துள்ளது. விடுதலைப் புலிகள் இதுவரை தனித்தமிழீழக் கோரிக்கையை கடைப்பிடித்து வந்தனர் அண்மையில் யாழ்ப்பாணத்தில் பேசிய புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் சமஷ்டி ஆட்சியை பரிசீலிக்கத் தயார் எனக் கூறியுள்ளார். இது எமக்கு கிடைத்த வெற்றியாகும்.

வெளிநாடுகளில் பல கொரில்லா இயக்கங்கள் இயங்கி வந்தது நாமறிந்த விடயமாகும். அவ்வாருன கொரில்லா இயக்கத்தினர் அரசியல் மேசைக்கு வந்து ஜனநாயக ரீதியில் பேச்சுக்கள் நடாத்தி அந்த நாட்டு அரசியலிலும் பிரவேசித்துள்ளனர், இந்த நிலை இலங்கையிலும் சாத்தியமாகும்.

அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக அரசாங்கம் எந்த வித நடவடிக்கை மேற்கொண்டாலும் பெரும்பான்மை மக்களின் சட்டபூர்வமான, நியாயமான, நீதியின் அடிப்படையிலான அம்சங்கள் பாதுகாக்கப்படும்.

சிறுபான்மை மக்கள் தமது சொந்த இடங்களில் கௌரவத்துடனும், மரியாதையுடனும் வாழ்வது நிச்சயிக்கப்படும் என்றும் கூறினுர்.

—ம-சி

# வத்தளை தமிழ் வீடுகளில் கொள்ளையர் அட்டகாசம்

(கொழும்பு)

வத்தளையில் குடியிருக்கும் தமிழர்களின் வீடுகளில் தொடர்ச்சியாகவும் பரவலாகவும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன.

இத்திருட்டு சம்பவங்கள் தொடர்பாக பொலிசாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டாலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதில்லையாம்.

தமிழர் குடியிருக்கும் வீடுகளில் ஆட்கள் இல்லாத நேரம் கூரைகள் பிரித்து உள்ளே இறங்கி பெறுமதியான பொருட்களை திருடிச் செல்கின்றனர். இத்திருட்டு நடைபெறும் வேளைகளில் நேரில் கண்டாலும் அயலவர்கள் மௌனம் சாதிக்கின்றனராம்.

இச்சம்பவத்தினுல் வத்தளைப்பகுதியிலுள்ள தமிழர்கள் அச்சத்துடன் வாழ்வதாக தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளையர்கள் பற்றி பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தால் கொள்ளையர்கள் முறைபாடு செய்த தமிழ் குடியிருப்பாளர்களுக்கு கொலைப்பயமுறுத்தல் செய்கின்றனர்.

ரி-சி

## ரத்வத்தையின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடரும் இவ்வேளையில் அமைச்சர் ரத்வத்தையின் அறிவிப்பானது யுத்தத்தை ஊக்கப்படுத்துவதாயுள்ளது. இது சமாதான முயற்சிகளுக்கு பாதகமாகக் கூட அமையலாம்.

பொறுப்பு வாய்ந்தவர்கள் இப்படி பேசுவது கவலை தரும் விடயமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

-சி

## சந்திரிகாவின்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முன் வெளியாகுமென உறுதி செய்யப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளுடன் ஏன் நாலாம் கட்டப் பேச்சுக்கள் நடாத்தப்படவில்லை என்பதற்கான அரசின் பதில் இந்த பதில் கடிதத்தில் தெரிவிக்கப்படும் என தெவிக்கப்பட்டது.

இந்த நாலாம்கட்டப் பேச்சுக்களை தொடர்ந்து அடுத்த கட்டமான அரசியல் தீர்வு குறித்து பேச்சுக்கள் நடைபெறுமெனவும் இருந்தது.

அரசு பேச்சுக்களை இழுத்தடிப்பதாக விடுதலைப் புலிகள் பல தடவைகள் குற்றசாட்டியிருந்தனர், அடுத்த கட்டப் பேச்சுக்கு முன்னர் பூநகரி இராணுவ முகாமை அகற்ற வேண்டுமெனவும் மீன்பிடித் தடையை நீக்கவேண்டுமெனவும். பொருளாதாரத் தடையை முற்ருகநீக்கவேண்டுமெனவும் புலிகள் வலியுறுத்தியதும் தெரிந்ததே.

சி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-